**தங்காலை நகர சபை**

**அம்பாந்தோட்டை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மே 07 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 யூலை 14 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 13 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தங்காலை நகர சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டின் ஏப்ரல் முதல் திசெம்பர் மாதம் வரை தங்காலை ஆதார வைத்தியசாலையில் சுத்திகரிப்பு சேவைகளை வழங்குவதற்காக சபைக்கு மேலதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டமையால் ரூபா 489,333 கூட்டுத்தொகை இவ்வாண்டின் கொடுப்பனவு நடவடிக்கைகளுக்காக ஈடுசெய்யப்பட்டிருந்ததுடன் அப்பெறுமதி மீளாய்வாண்டின் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 01/2010 ஆம் இலக்க அரசிறைக்கொள்கை சுற்றறிக்கையின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியின் பின்னர் மத்திய அரசினால் மீளளிக்கப்படுகின்ற முத்திரைக் கட்டணம் மாகாண சபைகளுக்குச் செலுத்தி அதனூடாக உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு கிடைக்கச் செய்யும் வகையில் PFD/ACC/06 மு.கா. ஆம் இலக்க 2012 யூலை 23 ஆந் திகதிய அரசாங்க நிதித் திணைக்களத்தின் அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தினால் சபைக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் சபையினால் அதன் பின்னரும் 2011 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலத்திற்குரிய மத்திய அரசிலிருந்து மீளளிப்புச் செய்யவேண்டியிருந்த முத்திரைக் கட்டணமாக ரூபா 750,790 கூட்டுத்தொகை கடன்பட்டோருக்காக ஒதுக்கப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டிருந்த 28 வேலைகளுக்கான கொடுப்பனவு அறிக்கையின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீளளிப்புச் செய்யப்பட வேண்டிய பெறுமதி ரூபா 13,664,063 ஆக இருந்த போதிலும் கடன்பட்டோரின் கீழ் ரூபா 102,104 அதிகரித்து ரூபா 13,766,167 ஆக ஒதுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் ஒதுக்கப்பட்டிருந்த வேலைக் கடன்கொடுத்தோர் பெறுமதியும் அந்த அளவினால் அதிகரித்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் அங்கீகரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட ரூபா 157,115 தொகையான இரண்டு வேலைகளுக்கான மொத்தப் பணமும் சபைக்குக் கிடைத்திருந்த போதிலும், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அத்தொகை மேலும் அறவிடவேண்டிய பணமாக கடன்பட்டோர் பெறுமதியில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(உ) சபையினால் உள்ளூராட்சி ஓய்வூதிய பங்களிப்பு நிதியத்திற்காக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,375,808 தொகை கடன்கொடுத்தோர் ஒதுக்கம் செய்யப்பட்டிருந்த போதிலும், மாகாண அரசாங்க சேவை ஓய்வூதிய பங்களிப்புப்பட்டியல் மற்றும் கொடுப்பனவு விபரங்களின்படி அது ரூபா 4,431,084 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 55,276 தொகை குறைத்து ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டில் செலவிடப்பட்ட ரூபா 488,692 கூட்டுத்தொகையான செலவினம் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 951,312 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 812,559 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளவாறான வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 2,700 | 2,541 | 2,060 |
| (ii) | வாடகை | 8,436 | 5,860 | 2,676 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 446 | 344 | 32 |
| (iv) | ஏனைய வருமானம் | 94,754 | 48,062 | 3,813 |

#### 2.2.2 ஆதன வரி

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரித் தொகை ரூபா 2,060,122 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 1,572,207 முன்னைய ஆண்டிற்குரியதாகும். அது மொத்த நிலுவையில் 76 சதவீத அளவாக இருந்ததடன் நகர சபைக் கட்டளைச்

சட்டத்தின் 170(அ) இன் பிரகாரம் இந்த நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 வாடகை

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வாடகை வருமானம் ரூபா 2,675,838 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 2,284,842 தொகை சபைக்குரிய வாடிவீடுகளுக்காக அறவிடவேண்டியிருந்த வருமானமாகும். அது மொத்த நிலுவையில் 85 சதவீத அளவாக இருந்ததுடன் இந்த நிலுவை வாடகையை அறவிடுவதற்காக நகர சபைக்கட்டளைச் சட்டத்தின் 170(அ)(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 சட்ட நடவடிக்கைகள்

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவை வருமானமான ரூபா 3,797,932 இனை அறவிடுவதற்காக வழக்குத் தொடரப்பட்டிருந்ததுடன் ஆண்டின் போது இந்தத் தொகையில் ரூபா 120,000 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. ஆண்டின் இறுதியில் மேலும் அறவிடவேண்டிய தொகை ரூபா 3,677,932 ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

**(அ) பல்நோக்கு நடமாடும் கூடாரம்**

உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சிலிருந்து 2013 இன் பாதீட்டு முன்மொழிவின் மூலம் அமுல்படுத்தப்பட்ட மாகாணங்களில் வறுமையைக் குறைக்கும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 270,000 பெறுமதியான 10 கூடாரங்கள் சபைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் 05 கூடாரங்கள் மாத்திரம் பொருட்பதிவேட்டிற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. 2015 யூலை 07 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அந்த 05 கூடாரங்களும் சபை வசம் காணப்படாதிருந்ததுடன் பொருட்பதிவேட்டிற்குக் கொண்டுவரப்படாத 05 கூடாரங்கள் தொடர்பில் எந்தத் தகவல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பொருள் பற்றாக்குறை**

--------------------------------------

2015 யூலை 07 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது தீயணைப்புப் பரிவிற்குச் சொந்தமான LW 0344 ஆம் இலக்க நோயாளர் காவும் வண்டி மற்றும் LE 1134 ஆம் இலக்க லொறி என்பவற்றின் பொருட்பதிவேட்டிலுள்ள 03 உபகரணப் பகுதிகள் பௌதீகரீதியில் காணப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

-----------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

**(அ) தங்கெட்டிய வீர மாவத்தை**

----------------------------------------------

மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 40 மில்லியனான தங்கெட்டிய வீர மாவத்தை ஊடாக தங்கெட்டிய வீதிக்கு தொடர்புபடும் மாற்றுவழியை நிர்மாணிக்கும் வேலை 2006 இன் அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.2 ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய போட்டியாளர் கேள்வி கோரப்பட்டு ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்பட்டு நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக இந்த வேலை ரூபா 1,000,000 வீதமாக 40 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களுக்கு கையளிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டிருந்தது.

வீதியின் ஆரம்பம் மற்றும் முடியும் இடங்களில் வீரக்கெட்டிய பிரதான வீதிக்கு அல்லது திஸ்ஸமஹாராம பிரதான வீதிக்கு தொடர்புபடுத்துதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதனால் பாரியளவிலான கிரயமொன்றைச் செலவிட்டு இந்த வீதி நிர்மாணிக்கப்பட்ட போதிலும், அதன் பயன்பாட்டுத் தன்மை தொடர்பாக பிரச்சினையான நிலை காணப்பட்டது.

**(ஆ) வேலைகளின் பௌதீக பரிசோதனை**

--------------------------------------------------------------

சபையினால் அமுல்படுத்தப்பட்டிருந்த சில வேலைகள் தொடர்பாக 2015 யூன் 24 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழ் காண்பிக்கப்படுகின்றது.

-

## 1 வைபங்ஞாவாச மாவத்தையில் அமைந்துள்ள 1 ஆவது உப வீதி பக்கச் சுவருடன் நிர்மாணித்தல் I, II மற்றும் III ஆம் கட்டங்கள்

---

மதிப்பீட்டுத் தொகை ரூபா 3,000,000 ஆன இந்த வேலை அங்கீகரிக்கப்பட்ட சங்கமொன்றிற்கு கையளிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு ரூபா 2,894,016 கூட்டுத்தொகையான கொடுப்பனவு அறிக்கை தயாரிக்கப்பட்டு செலுத்தப்பட்டிருந்தது.

- இந்த கொடுப்பனவு அறிக்கையில் இந்த வீதியின் இரு பக்கமும் பக்கச் சுவர் நிர்மாணிப்பதற்காக ரூபா 1,466,136 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் வீதியின் இடது பக்க வீதியைப் பூர்த்தி செய்வதற்காக கொங்கிரீட் தட்டைப் போடுவதற்கு முடியுமாக இருக்கும் போது அவ்வாறு செய்யாது பக்கச் சுவர் கட்டப்பட்டிருந்தது. கட்டப்பட்ட பக்கச் சுவர் தனியார் காணியொன்றின் உரிமையாளரின் காணியைச் சுற்றி நிர்மாணிக்கப்பட்டிருந்தமையும் இந்த பக்கச் சுவரின் படி தனியார் காணி உரிமையாளரால், பக்கச் சுவர் தனது காணிக்குள் இருப்பதாகக் கருதி அதன் அடிப்படையில் மதிலொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

- வீதியின் வலது பக்கத்தின் பக்கச் சுவர் நிர்மாணிக்கும் போது தனியார் காணியின் உரிமையாளரின் காணியின் பின்பக்கப் பகுதியையும் மேவுகை செய்யும் வகையில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

- கொங்கிரீட் சிறு கற்கள் இட்டு வீதியின் மேற்பரப்பை அமைக்கும் போது தனியார் காணி உரிமையாளரின் காணியின் வாயிற் கதவு வரையும் அரசாங்கத்தின் பணம் பயன்படுத்தப்பட்டு கொங்கிரீட் சிறு கல் பதித்து வீதி அமைக்கப்பட்டிருந்ததுடன் வசிப்பாளர்களின்றிய மற்றும் வேலை பூர்த்தி செய்யப்படாத வீடொன்றின் முன்பகுதியும் கொங்கிரீட் சிறு கற்கள் பதித்து அமைக்கப்பட்டிருந்தமையும் அந்த வீட்டின் முற்பகுதியில் வீதி முடிவடைந்திருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

**(11) இதிபொக்குணகொடை வடக்கு நரக வீட்டுத் திட்ட பிரதான வீதியின் I ஆம் கட்டம் மற்றும் இதிபொக்குணகொடை பெலிஅத்த வீதி நகர வீட்டுத்திட்ட உள்ளக வீதியின் I ஆம் கட்டம் என்ற வீதிகளை அபிவிருத்தி செய்தல்**

---

87 மீற்றர் நீளத்தில் கொங்கிரீட் சிறு கற்கள் பதித்து அபிவிருத்தி செய்வதற்கான இந்த இரண்டு வேலைகளும் அங்கீகரிக்கப்பட்ட சங்கமொன்றிற்கு கையளிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு ரூபா 999,454 கூட்டுத்தொகையான கொடுப்பனவு அறிக்கை தயாரிக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மொத்த தூரம் 87 மீற்றர் நீளமான இந்த வீதியின் குழிகளுக்கு 41 மீற்றர் நீளத்திலும் 3 அங்குல தடிப்பத்திலும் ABC கலவை பயன்படுத்தப்பட்டதாகக் காண்பித்து ரூபா 61,551 கூட்டுத்தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், வீதியின் 03 இடங்களில் கொங்கிரீட் சிறுகற்களை கழற்றி பரீட்சிக்கப்பட்டதுடன் அந்த இடங்களில் கற்தூள் மாத்திரம் காணப்பட்டதுடன் ABC கலவை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிர்வாகம்

(இ) வாகனப் பராமரிப்பும் கட்டுப்பாடும்

(ஈ) மனிதவள முகாமைத்துவம்